# அறவியற் சிந்தனைகளை வெளிப்படுத்துவதில் நாட்டுப்புறவியலின் வகிபாகம் - பழமொழிகளை அடிப்படையாகக்கொண்டது

கலாநிதி (திருமதி) சுகந்தினி சிறிமுரளிதரன்,

முதுநிலை விரிவுரையாளர்,

இந்துநாகரிகத்துறை,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## அறிமுகம்

ஒரு நாட்டுமக்களின் நாகரிகத்தை, பண்பாட்டை, பழக்கவழக்கங்களை, கலைகலாச்சாரங்களை, வரலாற்றை மற்றும் நாட்டுநடப்பை உண்மையான முறையில் படம்பிடித்துக்காட்டுவதே நாட்டுப்புறவியல் ஆகும். இது வாழையடி வாழையாக வாழ்ந்து வளர்ந்து வருகின்ற நாட்டுப்புற மக்களின் வாழ்வையும், வாழ்வுக்கூறுகளையும் படம்பிடித்துக்காட்டுகின்றன. இது ஏட்டிலே வராத, எழுத்திலே காணமுடியாத ஆனால் உள்ளத்திலே ஊறிக்கிடக்கும் எத்தனையோ எண்ணங்களையும், நம்பிக்கைகளையும் எடுத்துக்காட்டும். நாட்டுப்புறவியலை இருவகையாக . வகைப்படுத்தலாம். (இராமநாதன்,ஆறு., 1997,ப.68.)

01. நாட்டுப்புற இலக்கியம்:- இதற்குள் பின்வரும் கூறுகளை உள்ளடக்கலாம். நாட்டுப்புறப்பாடல்கள், நாட்டுப்புறக் கதைகள், நாட்டுப்புறக் கதைப்பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், புராணக்கதைகள் ஆகியவற்றை உள்ளடக்கலாம்.
02. நாட்டுப்புறக்கலைகள், நம்பிக்கைகள் :- நாட்டுப்புற கலைகள், நாட்டுப்புற கைவினைப்பொருட்கள், நாட்டுப்புற நம்பிக்கைகள், நாட்டுப்புற பழக்கவழக்கங்கள், நாட்டுப்புற ஆடல், நாட்டுப்புறத்தெய்வங்களும், திருவிழாக்களும், நாட்டுப்புற விளையாட்டுக்கள், நாட்டுப்புற மருத்துவம் ஆகியவற்றை உள்ளடக்கலாம்.

இவையாவும் நாட்டுப்புறவியலை வெளிப்படுத்தும் கூறுகள் எனலாம். இந்தக் கூறுகளில் பழமொழிகளின் ஊடாக அறம்சார் விழுமியங்கள் எவ்வகையில் விளக்கப்படுகின்றன என்பதனை நோக்குவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

அறவியல்

தீயவற்றை நீக்கி நல்லவற்றைப் புரிதல் அறம் எனப்படுகின்றது. எப்படியும் வாழலாம் என்றன்றி இப்படித்தான் வாழவேண்டும் என்ற ஒழுங்கானதொரு விழுமியச்சிந்தனைகள் வாழ்க்கைக்கு தரும் உயர்ந்த அறங்கள் நாட்டுப்புறவியலில் காணமுடிகின்றது. மனிதவாழ்வை மேம்படுத்துகின்ற பண்புகள் அனைத்தையும் நாம் அறம் சார் செயற்பாடுகளாக நோக்கலாம். மனிதப்பண்புகள், மனித விழுமியங்கள், மனித மேம்பாடுகள் என்பவற்றை அனுசரிக்கும் போது அங்கு ஆத்மிகம் மிளிர்கின்றது. பிற உயிர்கள் மீது அன்பு காட்டுதல், சேவை செய்தல், உண்மை பேசுதல், நேர்மையாக நடத்தல், பிறர் நலன் பேணுதல், இன்னா செய்யாமை, நல்லொழுக்கம், சட்டங்களை மதித்தல், மனஅடக்கம், சூழலை மாசடையாது பேணுதல், நடுவு நிலைமை என்பவை எல்லாம் ஆத்மிக செயற்பாடுகள்.

மன அடக்கம்

மனிதன் பலமுள்ளவனாக இருப்பதும், பலவீனமாக இருப்பதும் பொதுவாக காணப்படும் நிலை. இந்த நிலைக்கு எல்லாம் மனிதன் தான் காரணம். அதிலும் மனிதனின் மனம் தான் முக்கிய காரணம் எனலாம். மனக்கட்டுப்பாடு தரும் பெரும் விளைச்சல் தான் மனஅமைதி. மனஅமைதி பெற்ற மனிதன் தானும் நல்லபடி வாழ்கின்றான், எடுத்தகருமங்களில் வெற்றி பெறுகின்றான். அவ்வாறே ஏனையோரையும் வாழவிடுகின்றான். எல்லோருடைய அன்பையும், ஆதரவையும், நல்லெண்ணத்தையும்,நம்பிக்கையையும் பெற்றுக்கொள்கின்றான். இதனால் சமுகத்தில் உயர்ந்து நிற்கின்றான். மன அடக்கத்தின் முக்கியத்துவம் தொடர்பாக நாட்டுப்புறவியலில் கூறப்படுகின்றது. குறிப்பாக,'மனம் ஒரு குரங்கு', 'மனம் ஒரு குதிரை போன்றது', 'மனம் உண்டானால் இடமுண்டு', 'அடக்கம் ஆயிரம் பொன் பெறும்', 'போதுமென்ற மனமே பொன்செய் மருந்து', 'ஆசையண்டினால் அழுகையும் அண்டும்', 'மனக்கவலை

பலக்குறைவு', 'நார் அறுந்தால் முடியலாம், மனம் அறுந்தால் முடியலாமா?' 'ஆசைக்கோர் அளவில்லை', அகத்தின் அழகு முகத்தில் தெரியும்', போன்ற பழமொழிகள் மன அடக்கத்தை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

இளமையிலே அற்பசுகங்களை நாடி கட்டுக்கடங்காத காளைபோல தான்தோன்றித்தனமாக சமுகபுறழ்வுகளை ஏற்படுத்தமுனையும் இளைஞர் கூட்டத்தினரை குறிப்பிடும் போது 'நாணயம் குத்தாத நாம்பன் போல' என குறிப்பிடுவதைக் காணமுடிகிறது. இது மட்டுமன்றி மனிதனானவன் தனது வாழ்க்கையிலே சகல விடயங்களிலும் கட்டுப்பாட்டுடன் இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் அவனது வாழ்வு சுபீட்சம் அடையும். குறிப்பாக, வருமானத்திற்கு ஏற்றபடி செலவுகளை கட்டுப்படுத்த வேண்டும். இதனை விளக்க,'விரலுக்கேற்ற வீக்கம் தேவை', 'எட்டாப் பழத்திற்கு கொட்டாவி விடாதே'போன்ற பழமொழிகள் சமகால செல்நெறியில் அருகிவருகின்ற கட்டுப்பாட்டின்மையை எடுத்துக்காட்டுகின்றது.

கற்பு

சிற்றின்ப விடயங்களில் மனக்கட்டுப்பாடுகள் இல்லாதவர்கள் தங்களைத்தாங்களே அழித்துவிடுகின்றனர். ஆண் - பெண் உறவு என்பது புனிதமான கைங்கரியம். அத்தகைய தூய இல்லற வாழ்க்கையை நெறிப்படியும், முறைப்படியும், அளவறிந்து வாழவேண்டும். பெண்களும், ஆண்களும் கற்பொழுக்கம் பேணுவதில் கட்டுப்பாடு உடையவர்களாக இருக்கவேண்டும். அற்பசுகங்களை அனுபவிப்பதில் ஆசைகொண்டவர்கள் தமது வாழ்வையே அழித்துவிடுகின்றனர். இதனையே மனுதர்மசாஸ்திரம் "இந்த உலகத்தில் மனிதனுக்கு பிறன் மனைவியை புணர்தல் போல ஆயுளைக் குறைக்கும்படியான காரியம் வேறு இல்லை." எனும் கருத்து சிந்திக்கத்தக்கது. கற்பின் முக்கியத்துவத்தை நாட்டுப்புறவியலில் பல்வேறு சந்தர்ப்பங்களில் காணமுடிகின்றது. குறிப்பாக,

'கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்', 'கணவனே கண்கண்ட தெய்வம்', 'ரெண்டு பெண்டாட்டிக்காரன் பாடு திண்டாட்டம்',

போன்றனவும், கற்புடைய குடும்ப பெண் பற்றிக் குறிப்பிடுகையில், 'பெண்டிர்க்கு அழகு எதிர் பேசாது இருத்தல்', 'தாயைப்பார்த்துப் பெண்ணைக்கொள், பாலைப்பார்த்துப் பசுவைக்கொள்', 'பொம்பிளை சிரிச்சாப் போச்சு, புகையிலை விரிச்சாப் போச்சு', 'பெண்சாதி கால்கட்டு, பிள்ளை வாய்கட்டு' எனும் பழமொழிகளும், 'கணவன், மனைவி பெயரைச்சொல்லி அழைப்பதும், மனைவி, கணவன் பெயரைச்சொல்லி அழைப்பதும் ஆயுளை குறைக்கும்'. எனும் நம்பிக்கைகளும் கற்பு பற்றி எடுத்துக்காட்டுகின்றது. அதேபோன்று நாட்டுப்புறவியலில் கற்புக்குரிய பாடல் ஒன்று மிக அழகாக வினாவிடை வடிவில் கூறப்பட்டுள்ளது.

கேள்வி:- 'மண்குடம் கொண்டு மலையோரம் தண்ணிக்குப்போகும் - மாமன்மகளே

உன் மண்குடத்தின் விலை என்ன?

பதில்:- 'மண்குடம் போனால் மறுகுடம் வாங்கலாம், மானம் போனால் - மாமன் மகளே

உலகம் என்ன சொல்லும்'

போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

## நாவடக்கம்

பெரும்பாலான பிரச்சினைகள் சண்டை, சச்சரவு என்பவற்றை நாவைக்காப்பதன் மூலம் தவிர்க்கலாம். இனிய அன்பும், ஆதரவும் நிறைந்த வார்த்தைகளை பணிவுடனும், பண்புடனும் பேசுவது என்ற உறுதியை நாம் கொண்டிருந்தால் வேறு அறங்கள் தேவையில்லை. நாவடக்கத்தின் முக்கியத்துவத்தினை பின்வரும் விடுகதை எடுத்துக் காட்டுகின்றது.

'சளசளக்குமாம் சண்டைக்குப் போகுமாம் அடக்கிக்கொண்டால் அகிலம் உனக்கு அது எது? நாக்கு'

மது விலக்கு

சமூக சீர்கேடுகளில் மிகமுக்கிய அம்சமாக காணப்படுவது மது அருந்துதல். இதனைக்கருத்தில் கொண்டு நாட்டுப்புறவியலில் பல்வேறு, பழமொழிகள், பாடல்கள் காணப்படுகின்றது. குறிப்பாக,'குடி குடியைக்கெடுக்கும்', 'குடி, சூது, விபசாரம் குடியைக்கெடுக்கும்', 'குடி நாட்டுக்கும், வீட்டுக்கும் கேடு', குடிகாரன் பேச்சு விடிஞ்சால் போச்சு', 'துறக்கத், துறக்க ஆனந்தம், துறந்த பின்பே பேரின்பம்' என்பவையும், அதேபோன்று மது விலக்கை விளக்கும் பாடலும் கீழ்வருமாறு அமைகின்றது.

'குடும்பம் கெடுக்கும் கள்ளு - போதை

கொடுக்கும் அபினைத்தள்ளு

உடம்பைத் துளைக்கும் புகை – புகையே

உடம்பை ஒடுக்கும் பகை

மக்கள் மனைவி எல்லாம் - குடியால்

முக்காலம் அடையும் துன்பம்

மக்களை மிருகம் என்றே – முதியோர்

மதிப்பாரோப்பா குடியரை?'

உண்மை சொல்லல்

அறவிழுமியங்களில் உண்மை சொல்லலும் முக்கியமானது. இதனை விளக்க,

'உண்மையை உணர்ந்தவர் ஒரம் பேசார்', .

'உண்மை சொல்லிக் கெட்டாருமில்லை, பொய் சொல்லி வாழ்ந்தாருமில்லை',

'பொய் சொன்னால் பொரியும் கிடையாது'

போன்ற நாட்டுப்புற பழமொழிகள் எடுத்துக்காட்டுகிறது. இதேபோன்று சத்தியமும் எல்லா அறவிழுமியங்களிற்கும் அடிப்படை ஆதாரமானது. சத்தியம் நித்தியமானது, மாறுந்தன்மையற்றது, காலதேச, வர்த்தமானங்களையெல்லாம் கடந்து நிற்பது. எவனொருவன் சத்தியத்தை உபாசித்து வாழ்க்கையில் கடைப்பிடிக்கிறானோ அவன் மனிதருள் மாணிக்கமாகிவிடுகிறான். சத்தியத்தை மீறினால் தெய்வ தண்டனை கிடைக்கும் என்ற நம்பிக்கை நாட்டுப்புறவியலில் காணப்படுகிறது. 'கானமயிலே உன்னை கைவிடுவதில்லை என்று/ மீனாட்சி கோயிலிலே வேட்டிபோட்டு தாண்டித்தாரேன்'/ 'வேட்டிபோட்டுத்தாண்டித்தாரேன் கற்பூரத்தைக் கைபோட்டு அணைச்சுத் தாரேன்' என்ற பாடல் அடிகள் இதனை எடுத்துக்காட்டுகிறது.

### நடுவு நிலைமை

செங்கோல் வழுவாத்தன்மையுடன் வாழவேண்டும் என்பதனையும் நாட்டுபுறவியலின் ஊடாக கண்டுகொள்ளமுடிகின்றது. குறிப்பாக விடுகதை ஒன்றை நோக்கின்,

'உயிரில்லாத நீதிபதி ஒழுங்காக நீதி கூறுகிறான். அவன் யார்? தராசு'. நடுவுநிலைமை பேணவேண்டுமாயின் முதல் நிபந்தனை இன, மத. சாதி, பால், நட்பு, குடும்பம் எனும் சத்திகளால் ஈர்க்கப்படல் ஆகாது. எந்தவிதத்திலும் பிறருக்கு கடைமைப்படுதலை தவிர்க்கவேண்டும். இதனை பின்வரும் பழமொழிகள் எடுத்துக்காட்டுகின்றன. குறிப்பாக,

'நக்குண்டார் நாவிழந்தார்', 'சில்லறைக்கடன் சீரழிக்கும்' என்பவற்றைக் குறிப்பிடலாம்.

### பெரியோரை மதித்தல்

பெரியோரை மதிக்கும் பண்பு, உறவுகளை மதிக்கும் பண்பு நாட்டுப்புறவியலில் இடம்பெறுகிறது. குறிப்பாக, 'பெத்த மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு', 'மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்', 'தாயிற் சிறந்ததோர் கோயிலுமில்லை, தந்தை சொல்மிக்க மந்திரமில்லை', 'அன்னைக்கு உதவாதவன், யாருக்கும் உதவான்', போன்ற வரிகள் விளக்குகின்றன. மேலும் நாட்டுப்புறப்பாடல் வாயிலாக

நோக்கினால், 'கோச்சி வாழ கொப்பன் வாழ......ஊர் வாழ தேசம் வாழ குருவுக்கும், சிவனுக்கும் நல்லபிள்ளையாக இருந்து வாழ்க'. இப்பாடல் குழந்தை குருவின் சொற்கேட்டு நடந்தால் முன்னேற்றமடைந்து தாய், தந்தை உறவினர்கள், ஊரவர்கள், ஏனைய தேசத்தவர்கள் ஆகியோரை வாழவைக்கமுடியும் என்று மருத்துவிச்சி பாடுகின்றமை நோக்கத்தக்கது.

## ஒற்றுமையாக இருத்தல்

நாட்டுப்புறவியலில் ஒற்றுமையாக இருத்தலின் முக்கியத்துவம் எடுத்துக் கூறப்படுகின்றது. குறிப்பாக, 'ஊரோடு ஒத்து வாழ்', 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை', 'குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை', ஒற்றுமையே பலம்', 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு', அடம்பன் கொடியும், திரண்டால் மிடுக்கு', 'புரிந்துகொண்டு பழகினால் பிரிவுக்கு இடமில்லை' எனும் வரிகள் எடுத்துக்காட்டுகின்றன.

## தியாக உணர்வு

சமூகத்தில் மக்களிடையே தியாக உணர்வு வளரவேண்டும் என்பதனையும் நாட்டுப்புறவியலில் காணமுடிகின்றது. குறிப்பாக, 'பணிசெய்வார்க்கு பசியுமில்லை, பஞ்சமுமில்லை', ஏழையின் சிரிப்பில் இறைவனைக்காணலாம்' எனும் பழமொழிகளும், விடுகதை வடிவில் 'தன்னைத்தான் பலிகொடுப்பான் மற்றவர்க்கு ஒளி கொடுப்பான். அவன் யார்? மெழுகுவர்த்தி.' என்ற வகையில் விளக்கியுள்ளது.

## நன்றி உணர்வு

நன்றி உணர்வு உடையவராக இருக்க வேண்டியதன் அவசியத்தை நாட்டார் பழமொழிகள் எடுத்துக்காட்டுகின்றன. 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை', 'அன்னமிட்ட வீட்டில் கன்னமிடலாமா?', 'பிறர் உயிரை உன் உயிர் போல் நேசி', 'அன்பான நண்பனை ஆபத்தில் அறியலாம்'. போன்ற பழமொழிகள் வாயிலாக அறியலாம்.

## திட்டமிடல்

ஒரு காரியத்தை செய்யும் போது அதனை சிறப்பாகவும், திட்டமிட்டும், காலவரையறைக்குள்ளும் செய்து முடிக்கவேண்டும் என்பதனையும் நாட்டுப்புறவியல் பழமொழிகள் எடுத்துக்காட்டுகின்றன. குறிப்பாக, 'நன்றே செய், அதனை இன்றே செய்', 'நாளை என்பது இல்லை என்பதற்கு சமன்', 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்', 'ஐயர் வரும் வரை அமாவாசை காத்திராது', வெள்ளம் வரும் முன் அணைகட்டவேண்டும்' போன்ற வரிகள் விளக்குகின்றன. அதுமட்டுமல்லாது எதையும் சிந்தித்து காரியமாற்ற வேண்டும் என்பதனையும் நாட்டுப்புறவியலில் கண்டுகொள்ளலாம். 'மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே', 'ஆழமறியாமல் காலை விடாதே', 'அரசனை நம்பி புருஷனை கைவிடாதே', 'ஆற்றில் போட்டாலும், அளந்து போடு' போன்ற கருத்துக்கள் சிறந்த திட்டமிடலை எடுத்துக்காட்டுகின்றது.

## விருந்தோம்பல்

இந்து, தமிழ் பண்பாட்டுக்கூறுகளில் முக்கிய அம்சமாக விருந்தோம்பல் காணப்படுகின்றது. உறவு நீடிக்க வேண்டுமாயின் எவ்வாறு நடக்கவேண்டும் என்பதனை நம்பிக்கைகளின் ஊடாக அறிந்து கொள்ள முடிகின்றது. குறிப்பாக, 'விருந்தாளி வாழை இலையை உள்பக்கம் மடித்தால் திரும்ப வந்து சாப்பிடும் பாக்கியம் கிட்டும்', 'விருந்தினர் சென்றதும் வீட்டைப் பெருக்கக்கூடாது. அவ்வாறு செய்தால் அவர்களது தொடர்பு அறுந்துவிடும்'. 'வீட்டுக்கு முதல் முதல் வரும்போது வலது கால் எடுத்து வைக்க வேண்டும்'. ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

## நன் நடத்தைகள்

ஒருவர் கோபமாகவோ, ஆத்திரமாகவோ இருக்கும் பொழுது அதை மேலும் அதிகரிக்கும் காரியத்தை செய்யக்கூடாது என்பதனையும் நாட்டுப்புறவியல் பழமொழிகள் எடுத்துக்காட்டுகின்றன.'எரிகிற கொள்ளியில் எண்ணெய் ஊற்றாதே'. 'ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம்' எனும் வரிகளும், ஒருவன் துன்பப்படும்

போது மேலும் அவனுக்கு துன்பத்தை ஏற்படுத்தக்கூடாது என்பதனை விளக்க 'மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல', 'வெந்த புண்ணில் வேலைப்பாய்ச்சியது போல' என்பவை குறிப்பிடத்தக்கவை.

மேலும் சிறு பிள்ளைகளை வளர்க்கும் போது கட்டுப்படுத்தி வளர்க்கவேண்டும். இதனை விளக்க 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?.', 'அடித்து வளவாத பிள்ளையும்; முறித்து வளவாத முருங்கையும் ஒரு சதத்திற்கும் உதவாது'. எனும் வரிகள் பிள்ளைகளை தண்டிக்க வேண்டிய நேரத்தில் தண்டித்தும், அணைக்க வேண்டிய நேரத்தில் அணைத்தும் வளர்க்க வேண்டும் என்பதனை எடுத்துக்காட்டுகின்றன. மேலும், நாட்டுப்புறவியலில் சமீபகாலங்களில் அருகிவருகின்ற அறவிழுமிய சிந்தனைகளுக்கு ஏற்றவகையில் கூறப்பட்ட கருத்துக்களில் மேலும் சிலவற்றை நோக்கமுடிகின்றது. குறிப்பாக, மனிதர்களிடம் ஒன்றை நினைத்து இன்னொன்றைப்பேசி பிறிதொன்றை செய்வது என்ற நிலைப்பாடு பரவலாக காணப்படுகின்றது. இதனை விளக்க,'படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோயில்', 'பசுத்தோல் போர்த்த புலி' என்ற பழமொழிகள் இன்றைய உலகில் காணப்படுகின்ற பாசாங்கு வாழ்க்கையை மையப்படுத்திய கருத்துக்களாக அமைந்துள்ளன.

மேலும், வாழ்க்கை முறையில் ஏற்படுகின்ற அனுபங்கள் அவனது வாழ்க்கையை சீர்செய்யும் என்பதை நாட்டுப்புறவியலில் தெளிவுபடுத்தியுள்ளார்கள். 'சூடு கண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது' என்ற பழமொழியும், எமது வாழ்வில் மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறு நற்செயல்களுக்கு இடையில் ஒரு சிறிய தீய செயற்பாடு வருமாயின் எமது வாழ்க்கையை பாதிக்கும் என்பதை விளக்க, 'ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம்' எனும் பழமொழியும் கூறப்படுகின்றது. இதேபோன்று, எமது வாழ்க்கைக்கு தேவையான நல்ல நண்பர்களை சேர்த்துக்கொள்வதற்கும் நாட்டுப்புறவியலில் சிறந்த பழமொழிகள் காணப்படுகின்றன. 'பன்றியோடு சேர்ந்த பசுக்கன்றும் மலம் தின்னும்','பூவோடு சேர்ந்த நாரும் மணம் வீசும்' போன்ற வரிகள் ஊடாக அறிந்துகொள்ளலாம். எமது வாழ்வில் சுத்தமாக இருத்தலின் முக்கியத்துவம் பற்றியும் நாட்டுப்புறவியலில் கூறப்படுவதைக் காணலாம்.'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்',

'சுத்தம் சுகம் தரும்' எனும் வரிகள் மூலம் எடுத்துக்காட்டுகின்றது. நல்ல மாணவனுக்குரிய பண்பு பற்றி நாட்டுப்புறவியலில் குறிப்பிடும் போது, 'நல்ல மாட்டுக்கு ஒரு சூடு; நல்ல பிள்ளைக்கு ஒரு சொல்லு' என்றவாறு குறிப்பிட்டுள்ளது.

அதேபோன்று குறித்த ஒரு நபருக்குரிய பிரச்சினையை பெரிதாக காட்சிப்படுத்திய அதே நேரம் மற்றவர்களின் பிரச்சினையை கவனிக்காத சுயநலம் கொண்ட செயற்பாட்டை விளக்க,'தலையிடியும் காச்சலும் தனக்கு வந்தால் தான் தெரியும்', 'தனக்கு தனக்கு என்றால் சுளகு படக்கு படக்கு எனுமாம்' போன்ற நாட்டுப்புற கருத்துக்கள் நன்நடத்தையை விளக்குகின்றன.

## நாட்டுப்புறவியலின் பயன்

அறம்சார் விழுமியங்களை கடைப்பிடிப்பதினால் பெறப்படும் பயன்கள் பற்றியும், விளைவுகள் பற்றியும் கூட நாட்டுப்புறவியலில் கூறத்தவறவில்லை.'தர்மம் தலை காக்கும்'

'அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்','வினை விதைத்தவன் வினை அறுப்பான், திணை விதைத்தவன் திணை அறுப்பான்'போன்ற பழமொழிகளை குறிப்பிடுவதுடன், கீழ்வரும் பாடல் வரிகளும் விதி என்ற அறக்கருத்துக்களை சுட்டிநிற்கின்றது.'தலையிலெழுதியதை தள்ளிவைப்பார் ஆருமில்லை/ ஏட்டிலெழுதியதை எடுத்து அறிவார் ஆருமில்லை/ அன்றெழுதும் ஆதிசிவன் அழித்தெழுதப் போவதில்லை'என்ற பாடல் வரிகள் மூலம் விதியின் வலிமையை எடுத்துக்காட்டுகின்றது.

## நிறைவுரை

நாட்டுப்புறவியலில் கூறப்படுகின்ற அறக்கருத்துக்கள் பாமரமக்களின் அனுபவங்களை மனதிலே உள்வாங்கி, அவற்றின் வெளிப்பாடாக தோற்றம் பெற்று முக்காலத்திற்கும் அறிவுசார்கருத்துக்களை வழங்கிவரும் சிறப்புக்கொண்டதாக அமைகின்றது. இன்றைய நவீன, விஞ்ஞான உலகிற்கு பொருந்தக்கூடிய பல அரிய நற்கருத்துக்களை வெளிப்படுத்தியிருப்பதுடன், அவை யாவும், காலம்கடந்த பொன்மொழிகளாக இன்று காணப்படுகின்றன. நாட்டுப்புறவியலை

சமூகத்திற்கு பயன்படுத்தாவிட்டால் நமது கடமைகளிலிருந்து தவறியவர்களாக கணிக்கப்படுவோம். இதனை *தூமஸ் கீரின்* என்ற அறிஞர், 'வகுப்பறையில் போதிக்கும் கல்வி வாழ்க்கையோடு தொடர்புடையது இல்லை எனவும், நாட்டுப்புறவியல் கல்வி வாழ்வோடு தொடர்புடையது' எனவும் கூறுகின்றார்.கடந்த காலங்களில் வாழ்ந்த மக்கள் சுருதி (இலக்கிய அறிவு), யுக்தி (புத்திக்கூர்மை), அனுபவம் (வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவம்) எனும் முத்திறத்தாலும் சமய வாழ்வில் அறவிழுமியங்களை செம்மையாகக் கடைப்பிடித்து வந்தார்கள். எம்மூதாதையர்கள் கடைப்பிடித்த சிறந்த அறவிழுமியங்களை மழுங்கவிடாது, இன்றைய உலகமயமாக்கலின் விளைவுகளினால் மானிடவாழ்வியலின் சிதைவுகளின் மத்தியில் வாழ்ந்து வருகின்ற மக்களுக்கு குறிப்பாக மாணவர்களுக்கு ஒப்படைக்கவேண்டிய பாரிய பொறுப்பு எம் அனைவருக்கும் உள்ளது. அதற்கேற்றவகையில் இன்றைய இயந்திரத்தன்மைகொண்ட மனிதவாழ்விலே எமது நாளாந்த கடமைகளில் நாட்டுப்புற அறக்கருத்துக்களை உள்வாங்கி கடைப்பிடிப்பதன் ஊடாக சிறந்த ஆரோக்கியமுள்ள சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியும்.

உசாவியவை

01) இராமநாதன்,ஆறு., 1997, நாட்டுப்புறவியல் ஆய்வுகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
02) சக்திவேல்,சு.,1995, நாட்டுப்புறவியல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
03) சண்முகசுந்தரம்,சு.,1996, நாட்டுப்புறவியல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
04) விசாகரூபன்,கி.,2004, நாட்டார் வழக்காற்றியல் மலர் பதிப்பகம், யாழ்ப்பாணம்.